வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 28.03.2026 சனிக்கிழமை இதழ் : 81 பக்கங்கள் : 08

# இலங்கைக்குப் பெரும் ஆபத்து! உணவு விலை 15 வீதம் உயரும்!!

## சர்வதேச நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 28

**அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக ஹோர்முஸ் நீரிணை முழுமையாக மூடப்பட்டால், உலக அளவில் உணவுப் பொருள்களின் விலை உயர்வால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய இரண்டாவது நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.**

ஜேர்மனியின் கீல் உலகப் பொருளாதார நிறுவனம் நடத்திய ஆய்வின்படி, இந்த நீரிணை முடக்கப்பட்டால் இலங்கையில் உணவுப் பொருட்களின் விலை 15 வீதத்திற்கும் அதிகமாக உயரும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் சிம்பாப்வே முதலிடத்தில் உள்ளது (30 வீத விலை உயர்வு).

ஹோர்முஸ் நீரிணை வழியாக எரிபொருள் மற்றும் எரிவாயு மட்டுமன்றி, உலகளாவிய விநியோகச் சங்கிலிக்குத் தேவையான உரங்கள் மற்றும் இரசாயனங்களும் பெருமளவில் கொண்டு செல்லப்படுகின்றன.

குறிப்பாக, விவசாயத்திற்கு அத்தியாவசியமான "யூரியா" உள்ளிட்ட பெற்றோ கெமிக்கல் உரங்களின் உற்பத்தியில் வளைகுடா நாடுகள் முன்னணியில் உள்ளன.

"பிபிசி வெரிஃபை" (BBC Verify) தரவுகளின்படி, போருக்கு முன்னதாக நாளொன்றுக்கு 100க்கும் மேற்பட்ட கப்பல்கள் பயணித்த இந்த நீரிணையில், தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கப்பல்களே பயணிக்கின்றன.

இந்த விநியோகத் தடை

07

## மத்திய கிழக்கு மோதல்களினால் இலங்கை மீது புதிய அழுத்தங்கள்!

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர்



கொழும்பு, மார்ச் 28

இலங்கை இப்போது நெருக்கடியைக் கையாள்வதிலிருந்து பொருளாதார மீட்சியையும், வளர்ச்சியையும் நோக்கி நகர்ந்துவருகிறது. இருப்பினும் மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களின் விளைவாக எரிபொருள் விலைகளில் ஏற்பட்டுள்ள உயர்வு மற்றும் உலகளாவிய கட்டமைப்புக்களின் சேதங்கள் என்பன மீண்டும் புதிய அழுத்தங்களைத் தோற்றுவித்துள்ளன என ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஸாட்டோ கன்டா சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், முக்கிய பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் மற்றும் "டித்வா" சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் சேதங்களை நேரில் ஆராய்தல் ஆகிய நோக்கங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஸாட்டோ கன்டா 3 நாள்கள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை நாட்டுக்கு வருகை தந்திருந்தார்.

07

## யாழ்.- கொழும்பு போக்குவரத்திற்கு மேலதிகமாக எரிபொருள் வேண்டும்

### ஜனாதிபதியுடன் கலந்துரையாட தீர்மானம்



யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே பொருள்கள் போக்குவரத்தில் ஈடுபடும் பாரவூர்திகளுக்கான மேலதிக எரிபொருள் கொடுப்பனவு தொடர்பில் ஜனாதிபதியுடன்

07

## வல்வெட்டித்துறை தமிழர் வரலாற்று மையம் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பூர்வீக காணியில் அமைக்க முன்னெடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க பருத்தித்துறை நீதவான் நீதிமன்று அனுமதித்துள்ளது.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள புலிகளின் தலைவரின் பூர்வீக காணியில் தமிழர் வரலாற்று மையம் ஒன்றினை நிர்மாணிக்க, அவரது சகோதரி வல்வெட்டித்துறையை சேர்ந்த ஆனந்தராஜ் என்பவருக்கு அற்றோணி தத்துவம் வழங்கியுள்ளார்.

அதன் அடிப்படையில் காணியில் கட்டு மானங்களை மேற் கொள்ள வல்வெட்டித்துறை நகர சபையில் அதற்கான

07

## யாழில் கத்திக்குத்து; இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்

07

## சபாநாயகருக்காக நேற்று ஆஜராகாத சட்டமா அதிபர்!

கொழும்பு, மார்ச் 28

பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவின் பணி இடைநிறுத்தத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவில், பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள சபாநாயகர் சார்பில் நேற்று சட்டமா அதிபர் முன்னிலையாகாத நிலையில், சபாநாயகர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனக ஈஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையானார்.

சட்டவிரோதமான முறையில் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவினால் குற்றப்பத்திரிகை

07

### மருந்து கொள்வனவு விவகாரத்தில்

## அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளனர் கெஹலிய குழுவினர்

### உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 28

தரமற்ற மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்த விவகாரத்தில், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட குழுவினர், அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக, உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு, இந்திய கடன் திட்டத்தின் கீழ், பதிவு செய்யப்படாத நிறுவனம் ஒன்றிடம் இருந்து, கொள்முதல் நடைமுறைகளை

07

## மாணவனுக்கு சிகிச்சை மறுப்பு சம்பவம் மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 28


இளவாலை பிரதேச வைத்தியசாலையில் மாணவர் ஒருவர் சிகிச்சைக்காக சென்றபோது வைத்தியர் கடமையில் இல்லாமை தொடர்பாக வெளியான செய்தி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ், இளவாலை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியிடம் விளக்கம் கோரியுள்ளார்.

இளவாலை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவன் நேற்று முன்தினம்

07

## பணி புரிந்த வீட்டிலேயே பணிப்பெண் கைவரிசை

### யாழில் 14 பவுண் நகையுடன் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் வீடொன்றில் பணிப்பெண்ணாக வேலை செய்த பெண் குறித்த வீட்டில் நகைகளை களவாடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதுடன்,

07

## இந்தியாவிலிருந்து எரிபொருள் இன்று கொழும்பை வந்தடையும்!

கொழும்பு, மார்ச் 28

இந்தியாவிலிருந்து 38,000 மெற்றிக் தொன் எரிபொருளைக் கொண்ட கப்பல் ஒன்று இன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய எரிபொருள் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் வரும் இந்தச் சரக்குக் கப்பலில் 20,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 18,000 மெற்றிக் தொன் பெற்றோல் என்பன உள்ளடங்கியுள்ளதாக தூதரகம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலேயை பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்தமை தேசத்துரோகச் செயல்!

**பொதுஜன பெரமுன சாடல்**



கொழும்பு, மார்ச் 28

"பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு பங்களிப்பை வழங்கியவரே சுரேஷ் சாலே. அவரை பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்து தடுத்து வைத்திருப்பதை தேசத் துரோக நடவடிக்கையாகவே கருதுகின்றோம்."

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினரான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, திடீர் உடல்நலக்குறைவு காரணமாக, கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல விசாரணைகள் நடந்தன. அந்த விசாரணைகளில் சுரேஷ் சாலேயுக்கு தொடர்பிருப்பதாக தெரிவிக்கப்படவில்லை. வெளிநாட்டு விசாரணைகளில்கூட அவரின் பெயர் இடம்பெறவில்லை.

எனவே, இப்போது எவ்வாறு சாட்சி கிடைத்து என்பதே எமது கேள்வியாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றுவதற்கும், புலி ஆதரவாளர்களை திருப்திபடுத்துவதற்காகவுமே சுரேஷ் சாலே இலக்குவைக்கப்பட்டுள்ளார்." எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# முக்கிய அரிசி வகைகளை இறக்குமதி செய்ய நேரிடும்

கொழும்பு, மார்ச் 28

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் சந்தையில் நிலவக்கூடிய அரிசித் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் வகையில், சம்பா மற்றும் கீரிச் சம்பா உள்ளிட்ட முக்கிய அரிசி வகைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி, சந்தையில் தற்போது சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசி வகைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், கறுப்புச் சந்தை உருவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்தச் சூழலைக் கருத்திற்கொண்டு, உணவுப் பாதுகாப்புக்கான ஜனாதிபதி குழுவின் பரிந்துரையின் பேரில் தட்டுப்பாடாக உள்ள தானிய வகைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

போக்குவரத்துச் செலவுகள் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்தக்கூடாது என எச்சரித்துள்ள அவர், அவ்வாறு செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராகப் நுகர்வோர் விவகார அதிகாரசபை கடும் சட்ட நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்தார். (அ)

# ஈரான் போர் கப்பல் குறித்து விரைவில் விசேட அறிக்கை!

**ரவி கருணாநாயக்க தகவல்**

கொழும்பு, மார்ச் 28

ஈரானிய கப்பல் விவகாரத்தில் பரஸ்பர முரண்பாடுகளுடன் கூடிய கருத்துகள் முன்வைக்கப்படுவதாகவும் இது தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்ததன் பின்னர் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈரானிய கப்பல்கள் விவகாரத்தில் உண்மையான சரியான தகவலை அறிந்துகொண்டதன் பின்னர் இது தொடர்பில் கருத்து முன்வைக்கக்கூடியதாக இருக்கும். இந்தக் கப்பல்கள் விவகாரத்தில் இரு பரஸ்பர முரண்பாடாக கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. ஜனாதிபதி ஒரு கருத்தைக் கூறுகிறார். ஈரானிய தூதுவர் இன்னுமொரு கருத்தை முன்வைக்கிறார்.

இருந்தபோதும் இந்த விடயங்கள் குறித்து ஆராய வேண்டியுள்ளது. ஆராய்ந்ததன் பின்னர் உத்தியோகபூர்வ தகவல்களைப் பெற்றுக்கொண்டு பாராளுமன்றத்தில் இதுதொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன்-என்றார்.

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்துக்கு பலத்த பாதுகாப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற நிலையில், மாவட்ட செயலகச் சூழலில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பில் ஆசிரியர்களால் மாவட்ட செயலகம் முன் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகவும், காணி விடுவிப்பு கோரி காணி உரிமையாளர்களும் மாவட்ட செயலகம் முன் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மாவட்ட செயலக சுற்று வட்டப் பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (அ)

# பிஸ்கட், ஐஸ்கிறீம் விலைகள் உயராது

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் பிஸ்கட், ஐஸ்கிறீம் மற்றும் சொக்லேட் உள்ளிட்ட இனிப்புப் பண்டங்களின் விலைகள் எதிர்வரும் மே மாதம் வரை அதிகரிக்கப்படமாட்டாது என இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் சங்கம் உறுதியளித்துள்ளது.

வர்த்தக அமைச்சுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

சந்தையில் மூலப்பொருள்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு மத்தியிலும், நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மே மாதம் வரை தற்போதுள்ள விலைகளிலேயே இந்த உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# 38 அரிய வகை செல்லப்பிராணிகளை நாட்டுக்குள் கடத்த முயன்றவர் கைது!

கொழும்பு, மார்ச் 28

38 அரிய வகை செல்லப் பிராணிகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்த முயன்ற இலங்கைப் பயணி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அறிக்கைகளின்படி, கண்டி, திகனவைச் சேர்ந்த 56 வயதான சந்தேக நபர் நேற்று அதிகாலை பாங்கொக்கிலிருந்து வந்தடைந்தபோது, பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் அவரை வழிமறித்தனர்.

சோதனையின் போது, அவரது பயணப் பைகளில் கினி எலிகள், அணில்கள், புறாக்கள், சுகர் கிளைடர்ஸ் மற்றும் முள்ளம்பன்றிகள் ஆகியவை அவரிடமிருந்து இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

விசாரணையைத் தொடர்ந்து, சுங்கத்துறை சந்தேக நபருக்கு 2,50,000 ரூபா அபராதம் விதித்தது.

பறிமுதல் செய்யப்பட்ட விலங்குகள் பின்னர் பாங்கொக்குக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்காக தாய் எயார்வேஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். (அ)




# மின்சாரப் பயன்பாட்டு நேரத்தை மாற்றியமைக்காவிடின் ஆபத்து!

**எரிசக்தி அதிகாரசபை எச்சரிக்கை**

கொழும்பு, மார்ச் 28

மின்சாரப் பயன்பாட்டு நேரத்தை மாற்றியமைக்காவிட்டால் மின் கட்டண உயர்வு தவிர்க்க முடியாததாகிவிடும் என எரிசக்தி அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அந்த சபையின் தலைவர் கலாநிதி விஜேந்திர ஜே.பண்டார, மாலை 6 மணி முதல் 10 மணி வரையான உச்ச மின் தேவை நேரங்களில் நுகர்வைக் குறைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மக்களிடம் இருந்து ஆரம்ப கட்டமாகச் சாதகமான பதில் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனினும் இது குறித்த முழுமையான தரவுகள் திரட்டப்பட்ட பின்னரே பொதுமக்களின் பங்களிப்பு குறித்துத் துல்லியமாகக் கூற முடியும் என அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் மின்சார விநியோகத்தில் எவ்வித தடைகளும் இல்லை எனவும் மின் உற்பத்திக்கான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் உச்ச நேரங்களில் மின் தேவை அதிகரித்தால் உற்பத்திச் செலவு உயரும் என்றும், அதன் விளைவாக மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார். (அ)

# தேசிய ஒருமைப்பாட்டு வாரம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 28

தேசிய ஒருமைப்பாட்டு வாரம் நேற்றிலிருந்து ஆரம்பமானது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இதனை அறிவித்துள்ளதுடன், எதிர்வரும் 31ஆம் திகதி வரை இந்த வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

"நேர்மையான கலாசாரம் - தூய்மையான இலங்கை" எனும் கருப்பொருளின் கீழ் இம்முறை தேசிய ஒருமைப்பாட்டு வாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

அரச சேவையில் வெளிப்படையான நடைமுறைகளை ஊக்குவித்தல், நேர்மையை ஒரு தேசிய கலாசாரமாக நிலை நிறுத்துதல் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக முறையான வரி செலுத்தல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி இந்த விசேட வாரத்தை அமைச்சின் அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
28.03.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சர்வதேச நாணய நிதியக் குழுவுடன் அரசு பேசவேண்டிய முக்கிய விடயம்

மத்திய கிழக்கில் போர் தணிவதற்கு பதிலாக மேலும் தீவிரமடையும் அறிகுறிகளே தாராளமாகத் தெரிகின்றன. கணத்துக்குக் கணம் மாறுபடும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அறிவிப்புக்களை உலகம் நம்பத் தயாரில்லை.

ஈரான் மீதான தாக்குதல்களை குறிப்பாக, அதன் எரிசக்திவள கட்டமைப்புக்குள் மீதான தாக்குதல்களை ஐந்து நாட்களுக்கு அல்லது பத்து நாட்களுக்கு நிறுத்துவதாக ட்ரம்ப் கூறுவதெல்லாம் மேலும் போரைத் தீவிரப்படுத்தும் ஏற்பாடுகளுக்கான கால அவகாசமாகவே தோன்றுகிறது.

ஐக்கிய நாடுகள் அதன் 80 வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றில் தற்போது செயலிழந்திருப்பதைப் போன்ற ஒரு கவலைக்குரிய நிலைவரத்தை இதுவரையில் நாம் கண்டதில்லை. போரில் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இடையில் மத்தியஸ்தம் வகித்து மோதல்களை நிறுத்துவதற்கு வகிப்பதற்கு ரஷ்யா, சீனா போன்ற பலம் பொருந்திய நாடுகளினாலோ அமெரிக்காவின் நேசநாடுகளாக விளங்கி வந்திருக்கும் ஐரோப்பிய நாடுகளினாலோ முடியாமல் இருக்கிறது.

அமெரிக்காவின் நிபந்தனைகளின் அடிப்படையில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு திட்ட வட்டமாக மறுப்புத் தெரிவித்துவிட்ட ஈரான், அதன் சொந்தத்தில் முக்கியமான நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

இத்தகையதொரு ஆபத்தான சூழ்நிலையில், உலகில் பொருளாதார நெருக்கடி படுமோசமாக தீவிரமடைந்து கொண்டிருக்கிறது. போர் இன்றைக்குத்தான் முடிவுக்கு வந்தாலும் கூட, உலகப் பொருளாதாரம் மீட்சி பெறுவதற்கு பல மாதங்கள் எடுக்கும் என்று சர்வதேச அரசியல் அவதானிகளும் பொருளியல் நிபுணர்களும் அச்சந்தரும் அவதானிப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை, மத்திய கிழக்குப் போர் மிகவும் படுமோசமான ஒரு கால கட்டத்தில் வந்திருக்கிறது. நான்கு வருடங்களுக்கு முன்னரான வங்குரோத்து நிலையில் இருந்து படிப்படியாக மீண்டுவந்து கொண்டிருந்த நிலையில் கடந்த வருட இறுதியில் டித்வா சூறாவளி ஏற்படுத்திய அழிவுகள் பாரிய பின்டைவை ஏற்படுத்தின.

அந்த இயற்கை அனர்த்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி புனரமைப்பு நடவடிக்கைகளை பல்வேறு நெருக்குதல்களுக்கு மத்தியில் அரசாங்கம் முன்னெடுத்துவந்த நிலையில் மத்திய கிழக்குப் போர் மீண்டும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதற்கு மத்தியில், இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புக்கு உதவும் சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று தற்போது இலங்கைக்கு வந்திருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் ஐந்தாவது , ஆறாவது மீளாய்வுகளுடன் சேர்த்து ஒட்டுமொத்த பொருளாதார நிலைவரம் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக அந்த அதிகாரிகள் குழு ஏப்ரில் 9ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்போவதாக தேர்தல்களுக்கு முன்னர் வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தியினால் பதவிக்கு வந்த பிறகு அவ்வாறு செய்ய முடியாமல் போய்விட்டது. வானளாவ உயர்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவினால் திணறிக் கொண்டிருக்கும் மக்களுக்கு இன்றைய சூழ்நிலையில் உதவுவதற்கு மானிய அடிப்படையிலான சில திட்டங்களை முன்னெடுப்பது குறித்து. சர்வதேச நாணய நிதியக் குழுவினருடன் அரசாங்கம் அக்கறையுடன் ஆராய வேண்டும் என்பது பரவலான எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# போரை முடிவுக்கு கொண்டுவர ஈரான் கெஞ்சிக்கொண்டிருக்கிறது

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், மார்ச். 28

ஈரானுடனான போர் 28 நாட்களை எட்டியுள்ள நிலையில், போரை முடிவுக்கு கொண்டுவர ஈரான் அரசு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தன்னிடம் கெஞ்சிக் கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை வெள்ளை மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய ட்ரம்ப், ஈரான் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்தாலும், அமெரிக்கா இனி ஒப்பந்தம் செய்ய முன்வருமா என்பது சந்தேகமே என்று குறிப்பிட்டார்.

இந்தப் போரை முடிக்க நான்கு முதல் ஆறு வாரங்களாகும் என்று கணித்திருந்தோம். ஆனால், 26 நாட்களிலேயே இலக்குகளை விஞ்சி, கால அட்டவணையை விட வெகுவாக முன்னேறியுள்ளோம். ஈரானியர்கள் மோசமான போர் வீரர்கள். ஆனால், சிறந்த பேச்சாளர்கள். ஈரான் தனது அணுசக்தி கனவுகளை நிரந்தரமாக கைவிட்டால் மட்டுமே புதிய பாதை பிறக்கும், இல்லையெனில் அமெரிக்கா அவர்களின் மிக மோசமான கனவாக மாறும் என்று ட்ரம்ப் எச்சரித்தார். (எ)



# ஹோர்முஸ் நீரிணை பகுதியை நிர்வகித்த ஈரான் தளபதி பலி!

தெஹ்ரான், மார்ச். 28

ஹோர்முஸ் நீரிணை பகுதியை நிர்வகித்த ஈரான் கடற்படை தளபதி அலிரேசா, இஸ்ரேல் விமானப் படை தாக்குதலில் உயிரிழந்தார்.

அமெரிக்கா - ஈரான் போர் காரணமாக ஹோர்முஸ் நீரிணையை ஈரான் இராணுவம் மூடியுள்ளது. இதனால், உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

ஈரான் கடற்படை தளபதி அலிரேசா டாங்கிரி, ஹோர்முஸ் நீரிணை பகுதியின் பொறுப்பாளராக செயல்பட்டு வந்தார். சர்வதேச கடல் போக்குவரத்தை தடுத்து நிறுத்திய குற்றத்துக்காக அவரை சர்வதேச தீவிரவாதியாக அமெரிக்க அரசு அறிவித்திருந்தது. இந்தச் சூழலில், ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுக நகரின் பல்வேறு பகுதிகளை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் குண்டுகளை வீசின.

இதில், அலிரேசா டாங்கிரி உயிரிழந்தார். ஹோர்முஸ் நீரிணை எண்ணெய் கப்பல் போக்குவரத்தை முடக்கியதற்காக அவர் கொலை செய்யப்பட்டார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. எனினும், அவரது உயிரிழப்பை ஈரான் இராணுவம் உறுதிசெய்யவில்லை. (எ)

# கிளிநொச்சியில் நூதனமான முறையில் ஹெரோயின் விற்ற இரண்டு பேர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 28

வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டு நூதனமான முறையில் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்தில் நீண்ட காலமாக ஈடுபட்ட இருவர் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டனர்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் வடமாகாண குற்ற விசாரணை பிரிவினரால் இருவர் கிளிநொச்சி திருநகரில் கைது செய்யப்பட்டனர்.

நீண்ட காலமாக வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிடுபவர்களின் இடங்களுக்கே போதைப்பொருளை அனுப்பி நூதனமான முறையில் ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இருவரே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 13 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின், வாள், கையடக்க தொலைபேசிகள், வங்கி அட்டைகள், பணம் என்பனவும் கைப்பற்றப்பட்டன. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மார்ச் - 28 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 14
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும்.

**இடபம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும்.

**கன்னி**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைபார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் அனைத்து நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழிலில் லாபம் பெருகும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். பொறுமை தேவைப்படும்.

**மகரம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்.

**மீனம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைதான பத்து இந்திய மீனவர்களும் விடுவிப்பு

மன்னார், மார்ச். 28

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைதான 10 இந்திய மீனவர்களுக்கு எதிர்வரும் 12 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருட சிறைத் தண்டனை வழங்கி விடுவிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் மன்னார் நீதிவான நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் கடந்த மாதம் 19 ஆம் திகதி தலைமன்னார் கடற்பகுதியில் சட்டவிரோதமாக இரண்டு படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், குறித்த 10 மீனவர்களும் எதிர்வரும் 12 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருட சிறைத் தண்டனை வழங்கி விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் ஒவ்வொரு மீனவருக்கும் தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதோடு வழக்கின் சான்று பொருட்களை அரசுடமையாக்கவும் மன்னார் மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (எ)

## ஆட்பதிவு திணைக்களத்துக்கு அதிகளவானோர் வருகை

கொழும்பு, மார்ச். 28

ஆட்பதிவுத் திணைக்களத்தின் கணினி அமைப்பில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக, ஒருநாள் சேவை உள்ளிட்ட அனைத்து சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இந்த நிலையில், நேற்று பெருமளவிலான மக்கள் அங்கு பிரவேசித்துள்ளனர்.

கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக, மறு அறிவித்தல் வரை அனைத்து பொதுச் சேவைகளும் நிறுத்தப்பட்டதாக அந்தத் திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில், நேற்றுக் காலை முதலே ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வருகை தந்தனர்.

இவர்களில் சிலர் கடந்த செவ்வாய்க்கிழமை வருகை தந்து தமது பணிகளை முடிக்க முடியாமல் போனவர்களாவர் என தெரியவருகிறது.

இதேவேளை, வெள்ளத்தினால் அடையாள அட்டைகளை இழந்த பாடசாலை மாணவர்களும் வந்திருந்தனர். (எ)

## "யானைகளை விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்"

யாழ்ப்பாணம், மார்ச். 28

வடமராட்சி கிழக்கு கேவில், கட்டைக்காடு பகுதிகளில் யானைகளால் சேதமடைந்த பகுதிகளை பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் பார்வையிட்டார். இதன்போது, பாதிக்கப்பட்டவர்களோடு உரையாடிய ரஜீவன் எம். பி., வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்கள அதிகாரிகளுடன் பேசி யானைகளை விரட்டியடிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

யானைகள் திசை மாறி வடமராட்சி கிழக்கு பகுதிக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்தார். (எ-08)

## சுதந்திரபுரம் பகுதியில் 562 லீற்றர் டீசல் மீட்பு

முல்லைத்தீவு, மார்ச். 28

சுதந்திரபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 562 லீற்றர் டீசல் வைத்திருந்த 36 வயது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட சோதனையின்போது இவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில், சட்டவிரோதமான முறையில் எரிபொருளை சேமித்து வைத்திருந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் நீர்கொழும்பு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, மீன்பிடி படகு ஒன்றில் அனுமதிப்பத்திரமின்றி 1050 லீற்றர் டீசலை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதேநேரம் ஹிங்குராக்கொட பொலிஸார் யாய 07 பகுதியில் மேற்கொண்ட மற்றொரு சோதனையின் போது, அனுமதிப்பத்திரமின்றி 1995 லீற்றர் மண்ணெண்ணெயை சேமித்து வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். (எ)

## பாவனையாளர் அதிகார சபையால் வர்த்தகர்களுக்கு தெளிவூட்டல்

வவுனியா, மார்ச். 28

வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் வவுனியாவை சேர்ந்த வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் நுகர்வோர்களின் உரிமைகள் பாதிக்கப்படாத வாறு வர்த்தகர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதம் தொடர்பில் தெளிவூட்டப்பட்டது.

அத்துடன் பொருட்களை பதுக்கிவைத்தல், மற்றும் அதிக விலைக்கு விற்கும் வியாபாரிகள் மீது சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது தொடர்பாகவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் தலைவர் எஸ். கிருஷ்ண மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வவுனியாவை சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் விசாரணை அதிகாரிகளான எம். கியாஸ் ஆகியோர் பங்கெடுத்தனர். (எ-10)

## "வீதிகளிலுள்ள கழிவுகளை மக்கள் அகற்ற முடியாது"

யாழ்ப்பாணம், மார்ச். 28

வீதிகளில் உள்ள கழிவுகளை மக்கள் அகற்ற முடியாது என்று மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் க. யசீதன் தெரிவித்தார்.

மானிப்பாய் பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது கடந்த கூட்டத்தில் பேசப்பட்ட, மரணச் சடங்கின்போது வீதியில் வெடி கொளுத்துதல் தொடர்பான தீர்மானம் குறித்து மீண்டும் பேசப்பட்ட நிலையில் அவர் தவிசாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து உறுப்பினர் எஸ். பகீரதன் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த கூட்டத்தில் வெடி கொளுத்துதல் தொடர்பான தீர்மானம் எடுக்கப்படவில்லை. அது கூட்டத்தில் வெறுமனே பேசப்பட்டது மாத்திரமே. ஆனால், அது தீர்மானமாக எடுக்கப்பட்டதாக வெளியே பேசப்பட்டது.

மேலும், கடந்த 15 நாட்களுக்கு முன்னர் எமது வட்டாரத்தில் மரணச் சடங்கு ஒன்று இடம்பெற்றது. அந்த மரணச் சடங்கின்போது வீதியில் வெடி கொளுத்துவதற்காக, பிரதேச சபையில் பேசப்பட்டது போலவே சபைக்கு கட்டணமாக 10 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டது.

அந்த 10 ஆயிரம் ரூபாயானது, வெடி கொளுத்தும் குறித்த பகுதியை சுத்தம் செய்வதற்காகவே அறவிடப்படுகிறது. ஆனால், குறித்த மரணச் சடங்கு இடம்பெற்று 15 நாட்கள் கடந்த நிலையிலும் இதுவரை அந்த இடம் சுத்தம் செய்யப்படவில்லை.

மேலும், குறித்த பகுதியை தாங்களே சுத்தம் செய்வதாக மக்கள் கூறினால் அந்த 10 ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தாமல் விடலாமா?- என்றார்.

இதற்கு பதிலளித்த தவிசாளர், வீதியில் உள்ள குப்பைகளை அகற்றவோ, வேறு செயல்பாடுகளை செய்யவோ மக்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆகையால் நாங்கள் தான் அவற்றை செய்ய வேண்டும். நான் இந்தியாவில் இருந்ததால் குறித்த விடயம் தொடர்பில் எனக்கு தெரியவில்லை. எனவே குறித்த பகுதியை விரைவில் சுத்தம் செய்வோம்- என்றார். (எ-05)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

### எரிசக்தி ஆற்றலுக்கான பாதுகாப்பின்மை

# தேசிய பாதுகாப்பை கூட அபாயத்தில் ஆழ்த்துகிறது



கொழும்பு, மார்ச். 28

நமது நாட்டின் எரிசக்தி துறையில் பெரும் நெருக்கடி உருவாகி, இது பேரழிவில் முடியும் நிலை உருவாகி வருவதால், எரிசக்தி நெருக்கடியை கையாள்வதற்கான திட்டத்தை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். மத்திய கிழக்கு போரை காரணமாக காட்டி நாட்டின் பிரச்னைகளிலிருந்து அரசாங்கம் தப்பிப்பதற்கு முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு வாலுக்காராம விகாரையில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர், ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"எரிசக்தி நெருக்கடிக்கு லக்விஜய நுரச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் போதுமான மின் உற்பத்தி இல்லாமையே முக்கிய காரணமாகும். தரம் குறைந்த நிலக்கரி பயன்பாடே இதற்கு காரணமாகும். இந்த தட்டுப்பாட்டை ஈடு செய்து கொள்வதற்கு டீசல் மின் நிலையங்கள் பயன்படுத்தப்படுவதால், மின்சாரக் கட்டணம் அதிகரித்து மக்களுக்கு அதிக சுமை ஏற்படுவதோடு, எரிபொருட்களுக்கான தட்டுப்பாடுகளும் நேர்கிறது.

மத்திய கிழக்கு போரால் பல சவால்கள் ஏற்பட்டினும் அவற்றை குறைத்துக்கொள்வதற்கு வாய்ப்புகள் தோன்றும் போது அதற்காக முன்கூட்டியே திட்டமிடும் திறன் இருந்தும் அரசாங்கம் எந்த முன்கணிப்புகளையும் மேற்கொள்ளவில்லை. நாடாக எம்மால் எடுக்க முடியுமான முன்னாயத்த ஏற்பாடுகளை செய்திருக்கலாம். இப்போது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கே இந்த எரிசக்தி பாதுகாப்பின்மை காரணமாக அமைந்து காணப்படுகின்றன. இதனால் பல சவால்களும் எழுந்துள்ளன. தரம் குறைந்த நிலக்கரி பிரச்னைக்கு அரசாங்கம் இன்னும் உரிய தீர்வுகளை முன்வைக்கவில்லை."- என்றார். (எ)

# புதன்கிழமை விடுமுறை சரியான திட்டமிடல் அல்ல

### ரவி கருணாநாயக்க எம். பி.



கொழும்பு, மார்ச். 28

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் புதன்கிழமை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருப்பது சரியான திட்டமிடல் அல்ல. மாறாக, அரச ஊழியர்களை வீடுகளில் இருந்து பணியாற்றுமாறு ஏவியிருக்கலாம். அதே நேரம் அரசாங்கம் தற்போதுள்ள நிலையில் விவசாயிகளுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கி அவர்களை தைரியப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# தந்தை தாக்கியதில் மகன் பலி!

புத்தளம், மார்ச். 28

புத்தளம் - மகாகும்புக்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொஹொன்கல்ம பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற மோதலில் 26 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞன் தனது தந்தையுடன் வீட்டில் மது அருந்திக்கொண்டிருந்தபோது அவர்களுக்கிடையே ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியது. இதன்போது, தந்தை தனது மகனை கோடாரியால் தாக்கியதில், அவர் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 63 வயது நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (எ)

# சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களில் ஒரு பகுதியில் எந்த சிக்கல்களுமில்லை

### சுங்க ஊடக பேச்சாளர் விளக்கம்



கொழும்பு, மார்ச். 28

சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களில் ஒரு பகுதியை விசாரணை செய்வதற்கு தமக்கு சந்தர்ப்பம் கிடைத்ததாகவும், அந்தப் பகுதியில் எந்தவித முறைகேடுகளும் கண்டறியப்படவில்லை என்றும் சுங்க ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முழுநாடும் ஒன்றாக போதைப்பொருள் ஒழிப்பு தேசியவேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை சுங்கப் திணைக்களம் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. இதன்படி, 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் பல்வேறு வகையான போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பான 147 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு, 5.8 பில்லியன் ரூபாய் பெறுமதியான 435 கிலோ கிராம் போதைப்பொருள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன. நான் பணிப்பாளராகக் கடமையாற்றும் தடுப்புப் பிரிவுக்கு குறித்த கொள்கலன்களில் ஒரு தொகுதி விசாரணைகளுக்காக கிடைத்தது.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் தணிக்கைகளின் போது, அந்த கொள்கலன்களை இறக்குமதி செய்த நிறுவனங்கள் தொடர்பில் எந்தவித சட்டவிரோத நடவடிக்கைகளும் கண்டறியப்படவில்லை. இருப்பினும், குறித்த 323 கொள்கலன்கள் தொடர்பான முழுமையான அறிக்கைகள் கிடைத்த பின்னரே இது குறித்த இறுதித் தீர்மானத்தை வழங்க முடியும். தற்போது நான் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பரிசோதனை செய்த கொள்கலன்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்- என்றார். (எ)

# அலங்கார தாவரங்களை கடத்திய நபர் சிக்கினார்

கொழும்பு, மார்ச். 28

தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட அலங்காரத் தாவரங்களுடன் பயணி ஒருவர் நேற்று அதிகாலை விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

2 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய இந்தத் தாவரங்களுடன், சந்தேகநபர் வெளியேற முயன்றபோது கைது செய்யப்பட்டார்.

கண்டியைச் சேர்ந்த 57 வயது சந்தேகநபர், அதிகாலை 12. 30 மணியளவில் நாட்டை வந்தடைந்துள்ளார்.

அவர் கொண்டு வந்த பயணப் பொதியில் காகிதங்களால் சுற்றப்பட்ட நிலையில் இந்த அலங்காரத் தாவரங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்தத் தாவரங்களை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு அவரிடம் முறையான இறக்குமதி அனுமதிப்பத்திரமோ அல்லது தாவர சுகாதார பாதுகாப்பு சான்றிதழோ இருக்கவில்லை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெண்களை கடத்தி கொலை செய்த கும்பலிடமிருந்து மருந்துகள் மீட்பு!

## மட்டக்களப்பில் மேலும் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச். 28

மட்டக்களப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மயக்க மருந்து கொடுத்து பெண்களை கடத்தி தாலி உள்ளிட்ட தங்க ஆபரணங்களை கொள்ளை யிட்டு கிணற்றில் வீசி எறிந்து கொலை செய்து வந்த கும்பலு டன் தொடர்புபட்ட மற்றுமொரு சந்தேக நபரான 37 வயது ஓட்டோ சாரதியை வியாழக்கி ழமை இரவு மயக்கத்துக்கு பாவிக் கும் ஸ்பிரே யருடன் கைது செய் ததுடன் கொள்ளைச் சம்பவத் துக்கு பயன்படுத்தி வந்த சத்திர சிகிச்சைக்கு பாவிக்கும் மயக்க மருந்துகள் மற்றும் ஸ்பிரே, மாத் திரைகள் என்பனவற்றை மீட்ட தாக கிழக்கு மாகாண பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்ப திகாரி தெய்வநாயகம் மேனன் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி கொக் கட்டிச்சோலை நெல்லிக்காட்டு வயல் பிரதேசத்தில் பாழடைந்த கிணற்றில் இருந்து வவுணதீவு கொத்தியாவல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது இளம் தாய் ஒருவர் உயிருடனும் ஏற்கனவே காணாமல் போனதாகக் கருதப் பட்ட மற்றொரு பெண் ஒருவர் சடலமாக கிணற்றில் இருந்தும். மற்றும் இளம்தாயின் 3 வயதும் 4 மாதம் கொண்ட சிறுமி வயல் பகுதியில் உயிருடனும் மீட்கப் பட்டனர்.

இதனையடுத்து, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள காஞ்சி ரம்குடா பகுதியைச் சேர்ந்த 26 வயது பெண், அவரது 34 வயது கணவன், அவரது 22 வயது சகோதரன் மற்றும் கொள்ளை யிடப்பட்ட தங்க ஆபரணங் களை வாங்கிய ஊறணி, திருகோ ணமலை, வீதிகளைச் சேர்ந்த இரு நகைக்கடை உரிமையாளர் கள் உட்பட 5 பேரை பொலிஸார் கைது செய்ததுடன் இரு ஓட் டோக்கள், கார் ஒன்று மற்றும் கோடாரி, கூரிய ஆயுதங்களை மீட்டனர்.

இந்த நிலையில் தொடர் விசாரணைகளின் போது, கொள் ளையர்களின் காஞ்சிரம்குடா வீட்டின் பகுதியில் நிலத்தில் மயக்க மருந்துகள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் கடந்த இரண்டு மாதத்துக்கு முன்னர் ஓட்டோ சாரதி ஒருவ ரிடம் மயக்கத்துக்கு பாவிக்கும் ஸ்பிரேயர் வழங்கி வைத்துள்ள தாகவும் வெளி மாவட்டத்தில் உள்ள ஒருவரிடம் இருந்து இந்த மயக்க மருந்தை பல ஆயிரம் ரூபாய் பணம் செலுத்தி பெற் றுக் கொண்டதாகவும் விசார ணையில் தெரியவந்தது.

இதையடுத்து நேற்று முன்தி னம் இரவு கொள்ளையர்களின் காஞ்சிரம்குடா வீட்டை முற்று கையிட்டு நிலத்தில் இரண்டு அடி ஆழத்தில் பாதுகாப்பாக பொலித்தீன் பைகளில் சுற்றி வைக்கப்பட்டிருந்த சத்திர சிகிச் சையின் போது பாவிக்கப்படும் 6 மயக்க மருந்துகளை கொண்ட போத்தல் மற்றும் மயக்க மாத் திரைகள், மருந்துகளை பொலி ஸார் மீட்டனர்.

அதனைத் தொடர்ந்து கொக் கட்டிச்சோலை பிரதேசத்தில் வீடு ஒன்றை முற்றுகையிட்டு 37 வயது ஓட்டோ சாரதி ஒருவரை கைது செய்ததுடன் அவரது வீட்டின் நிலத்தில் புதைக்கப் பட்டிருந்த கொள்ளையர்கள் வழங்கிய மயக்கத்துக்கு பாவிக் கும் ஸ்பிரேயர் போத்தல் ஒன் றையும் குற்ற செயலுக்கு பயன் படுத்திய ஓட்டோ ஒன்றையும் மீட்டதாக பொலிஸார் தெரி வித்தனர். (எ)

# 4,000 ரூபாய் இலஞ்ச பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் கைது

அக்கரைப்பற்று, மார்ச். 28

அம்பாறை- அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் போக்கு வரத்து பிரிவில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவர், 4,000 ரூபாய் பணத்தை இலஞ்சமாக பெற்ற போது நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு வுக்கு வழங்கிய முறைப்பாட் டின் அடிப்படையிலேயே இந் தக் கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

முறைப்பாட்டாளர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்து அவரது தாய் விழுந்து விபத்துக்குள்ளானது தொடர் பில் "119" அவசர இலக்கத்துக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள் ளதாக குறித்த பொலிஸ் உத்தி யோகத்தர் கூறியுள்ளார்.

தாயிடம் வாக்குமூலம் பெற்று சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கவும், பொறுப் பில் எடுக்கப்பட்ட சாரதி அனு மதிப்பத்திரத்தை மீண்டும் ஒப் படைக்கவும் அவர் இலஞ்சம் கோரியுள்ளார்.

இதற்காக முதலில் 5,000 ரூபாய் கோரப்பட்டு, அதில் 1,000 ரூபாவை முன்பணமாகப் பெற்றுக்கொண்டு சாரதி அனு மதிப்பத்திரத்தை வழங்கியுள் ளார்.

மீதமுள்ள 4,000 ரூபாய் பணத்தை வழங்கினால், தாயி டம் மீண்டும் வாக்குமூலம் பெறாமல் "119" முறைப் பாட்டை நீக்கி, சட்ட நடவடிக் கைகளில் இருந்து விடுவிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை 10.12 மணிய ளவில் அக்கரைப்பற்று மருத்து வமனை வளாகத்தில் வைத்து 4,000 ரூபாய் பணத்தைப் பெற் றுக்கொண்ட போதே, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு வின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார். (எ)

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வு

## சந்தேகநபர் கைது!

நுவரெலியா, மார்ச். 28

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செப்பல்டன் தோட்டப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ் வில் ஈடுபட்டிருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

பொகவந்தலாவை பொலிஸா ருக்கு கிடைத்த இரகசிய தகவ லையடுத்து முன்னெடுக்கப் பட்ட விசேட சோதனையின் போதே சந்தேகநபர் வியாழக்கி ழமை மாலை கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்டவர் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்த 30 வயது இளைஞன் என அடையாளம் காணப்பட் டார்.

இதன்போது, மாணிக்கக்கல் அகழ்வுக்காக பயன்படுத்தப் பட்ட பல்வேறு உபகரணங்க ளும் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டன. (எ)

# பொதுமக்களிடம் அவசர கோரிக்கை

கல்முனை, மார்ச். 28

கல்முனை அஷ்ரப் நினைவு மருத்துவமனை இரத்த வங்கி யில் தற்போது அனைத்து வகை யான இரத்த பிரிவுகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நில வுவதாக மருத்துவமனை நிர்வா கம் தெரிவித்துள்ளது.

இந்த அவசர நிலையை முன் னிட்டு, இரத்த தானம் செய்ய தகுதியுடைய பொதுமக்கள் அனைவரும் உடனடியாக இரத்த வங்கிக்கு வருகை தந்து, உயிர்காக்கும் உன்னத பணியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண் டுள்ளனர்.

அவசர சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் ஏனைய மருத்துவ தேவைகளுக்காக தின சரி அதிகளவில் இரத்தம் தேவைப் படுகிறது. தற்போதைய கையி ருப்பு குறைவடைந்துள்ளமை யானது, பல நோயாளிகளின் உயிருக்கு ஆபத்தான அமைக் கூடிய சூழலை உருவாக்கியுள் ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (எ)

# சிறுத்தை தாக்கி தேரர் உயிரிழப்பு

கல்முனை, மார்ச். 28

அம்பாறை- பாணம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகஸ்த லாவ ஆரண்ய சேனாசனத்தில் தியானத்தில் ஈடுபட்டிருந்த தேரர் ஒருவர் நேற்று முன்தினம் காலை சிறுத்தை தாக்கியதில் உயிரிழந்தார்.

உயிரிழந்த தேரர் செக் குடி யரசு நாட்டைச் சேர்ந்த 43 வய துடையவர் என அடையாளம் காணப்பட்டார். இவர் குறித்த ஆரண்ய சேனாசனத்தில் நீண் டகாலமாக தியானத்தில் ஈடு பட்டு வந்தார்.

சிறுத்தை கடித்ததில் ஏற்பட்ட காயங்கள் காரணமாகவே தேரர் உயிரிழந்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளில் பாணம பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிரத்தியேக வகுப்புகளுக்கு தடை

காரைதீவு, மார்ச். 28

ஆலயங்கள், அறநெறிப் பாட சாலைகள் மற்றும் இந்து அமைப்புகளினால் முன்வைக் கப்பட்ட கோரிக்கைக்கு அமைய காரைதீவு பகுதியில் வெள்ளிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற் றும் பூரணை நாட்களில் நடை பெறும் பிரத்தியேக வகுப்புகள் காரணமாக மாணவர்களின் சமய விழுமியங்கள் பாதிக்கப்படுகின் றன என்ற குற்றச்சாட்டின் பேரில், அவ்வகுப்புகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்க சபை அனு மதி வழங்கியுள்ளது.

அம்பாறை- காரைதீவு பிர தேச சபையின் மாதாந்த சபைக் கூட்டம் வியாழக்கிழமை சபை அலுவலக மண்டபத்தில் தவிசா ளர் சு. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப் பட்டது. (எ)

# நுவரெலியாவில் இடியுடன் மழை

கொழும்பு, மார்ச். 28

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் நுவரெலியா மாவட் டங்களிலும் மாலை அல்லது இரவு நேரங்களில் ஒரு சில இடங் களில் மழையோ அல்லது இடி யுடன் கூடிய மழையோ பெய் யக்கூடும் என்று வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வுகூ றியுள்ளது.

இதேநேரம் நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக வறட் சியான வானிலை நிலவும்.

மத்திய, சப்ரகமுவ, வடமத் திய மற்றும் ஊவா மாகாணங்க ளிலும் குருநாகல், வவுனியா, காலி மற்றும் மாத்தறை மாவட் டங்களிலும் காலை வேளையில் சில இடங்களில் பனிமூட்ட மான நிலை காணப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வாகன விபத்தில் தாயும் மகனும் பலி

கம்பஹா, மார்ச். 28

ஊராபொல - ருவன்வெல்ல வீதியின் சப்புகஸ்தென்ன, லிஹி னியாகொல்ல பகுதியில் நேற்று முன்தினம் மாலை லொறி ஒன் றும் ஓட்டோவும் மோதியதில், ஓட்டோவில் பயணித்த தாயும் மகனும் உயிரிழந்தனர் என்று அத்தனகல்ல பொலிஸார் தெரி வித்தனர்.

சப்புகஸ்தென்ன, நிஹெட்டி கந்தவை சேர்ந்த ஓட்டோ சார தியான் அபேரத்ன மற்றும் அவரது தாயாரான 58 வயது சுமித்ரா ரத்னாவதி ஆகியோரே இவ் வாறு உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் பயணித்த ஓட்டோ ஊராபொல திசையி லிருந்து ருவன்வெல்ல நோக்கி சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த லொறியுடன் மோதி வீதியை விட்டு விலகி தூக்கியெறியப்பட்டு தலைகீ ழாக புரண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# செயலமர்வு

திருகோணமலை, மார்ச். 28

திருகோணமலை- தம்பலகா மம் பிரதேச செயலகத்தில் காணிச் சட்டங்கள் தொடர்ப ான விசேட செயலமர்வு நேற்று முன்தினம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் க. சதிசேக ரன் தலைமையில் பிரதேச செய லக மண்டபத்தில் நடைபெற் றது.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் இதனை ஏற்பாடு செய்திருந் தது. வளவாளராக கிழக்கு மாகாண முன்னாள் ஓய்வு நிலை காணி ஆணையாளர் க. குருநா தன் கலந்து கொண்டார். (எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மத்திய கிழக்கு...

இங்கு பல்வேறு சந்திப்புக்களிலும், களவிஜயங்களிலும் ஈடுபட்ட அவர், அது குறித்து மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கை இப்போது ஒரு நிலைமாற்றத்தில் இருக்கிறது. நெருக்கடியைக் கையாள்வதிலிருந்து மீட்சியையும், மீண்டெழும் தன்மை வாய்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதையும் நோக்கி நகர்ந்துவருகிறது. இருப்பினும் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் மோதலின் விளைவாக எரிபொருள் விலைகளில் ஏற்பட்டுள்ள உயர்வு மற்றும் உலகளாவிய கட்டமைப்புக்களின் சேதங்கள் என்பன மீண்டும் புதிய அழுத்தங்களைத் தோற்றுவித்துள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பின்போது இலங்கைக்கான 100 மில்லியன் டொலர் மேலதிக நிதியுதவி வழங்கலை உறுதிப்படுத்தினேன். இந்த உதவி வெளியக அழுத்தங்களில் இருந்து நாட்டின் பரந்துபட்ட பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்யும்.

அதேவேளை உட்கட்டமைப்பு, இணைப்புகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் சார்ந்த முதலீடுகளில் இலங்கைக்கான வருடாந்த உதவி வழங்கலை சுமார் ஒரு பில்லியன் டொலர் வரை அதிகரிப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

அதேபோன்று நான் கேகாலை மாவட்டத்தில் "டித்வா" சூறாவளியினால் சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டேன். இவை சார்ந்த முதலீடுகள் மற்றும் வளர்ச்சியை நோக்கி நிலைமாற்றமடைய வேண்டும். முதலீடுகளை அடிப்படையாகக்கொண்ட நிலையான வளர்ச்சியை இலங்கை அடைந்துகொள்வதற்கு அவசியமான ஆதரவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும்-என்றார்.

(அ)

## யாழ். - கொழும்பு...

கலந்துரையாடுவதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் மத்திய கிழக்கு பிராந்திய மோதல்களால் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் கருத்தில் கொண்டு, எரிபொருள் விநியோகத்தை சீரமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக, யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே பொருள்கள் போக்குவரத்தில் ஈடுபடும் பாரவூர்திகளுக்கான மேலதிக எரிபொருள் கொடுப்பனவு தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட முடிவெடுக்கப்பட்டது.

மேலும், கடற்றொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கான எரிபொருள் அந்தந்த அமைப்புக்களின் விண்ணப்பங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதாகவும், ஏனைய தொழிற்துறையினர் பிரதேச செயலகங்கள் ஊடாக தமது கோரிக்கைகளை முன்வைத்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

புதிதாக சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு உரிய அனுமதிகள் இதன் பின்னர் வழங்கப்பட்டன.

மேலும், யாழ்.மாவட்ட செயலகம், வடக்கு மாகாண சபை மற்றும் மத்திய அரசின் திணைக்களங்களால் இவ்வாண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழான வீதிகளின் திருத்தப் பணிகள், படகுச் சேவைகள் மற்றும் தீவகப் பிரதேசங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

போக்குவரத்துச் சேவைகளான பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவை (சிசுசரிய), இரவு நேர சேவை (நிசுசரிய) மற்றும் தொழில்துறை சார்ந்த இடங்களுக்கான போக்குவரத்து சேவை (ஹமிசரிய) ஆகியவற்றின் நிலை குறித்தும் ஆராயப்பட்டது.

அத்துடன், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தீர்வு காணப்படாது மாவட்டக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் எட்டப்பட்டன.

(அ)

## செய்தி திருத்தம்

நேற்றைய ஈழநாடு முன் பக்கத்தில் வெளியாகிய "நடராஜா ரவிராஜ் கொலை வழக்கு; உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இரத்து!" என்ற செய்தியில் 'உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இரத்து' என்பதற்கு பதிலாக 'கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு இரத்து' என்றே இடம்பெற்றிருக்கவேண்டும். தவறுதலாக அது உயர்நீதிமன்றம் என்று இடம் பெற்றுவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)

## இலங்கைக்குப் பெரும்...

இலங்கையின் விவசாய உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. (அ)

## யாழில் கத்திக்குத்து...

அதே பகுதியை சேர்ந்த இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குருநகர் பகுதியில் இரு இளைஞர்களும் போதையில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டவேளை ஒருவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து மற்றையவர் மீது சரமாரியாக குத்தியுள்ளார்.

அதில் படுகாயமடைந்த இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தாக்குதலுடன் தொடர்புடைய இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## சபாநாயகருக்காக...

தாக்கல் செய்யப்பட்டு, பிரதிச் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவின் பணி இடைநிறுத்தப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு கடந்த முறை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சபாநாயகர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சாயா சிறி நம்மூனி, இந்த வழக்கை சமரசமாக முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக நீதிமன்றிற்குத் தெரிவித்திருந்தார்.

அதன்படி, சமரசத்திற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரொஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று இந்த மனு அழைக்கப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, பிரதிவாதியான சபாநாயகர் சார்பில் தாம் முன்னிலையாகப் போவதில்லை என நீதிமன்றிற்கு அறிவித்தார். இதனைத் தொடர்ந்து, சபாநாயகர் சார்பில் தாம் முன்னிலையாவதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக ஈஸ்வரன் தெரிவித்தார்.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, மனுவின் விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக ஒரு திகதியை வழங்குமாறு கோரினார்.

இதற்கமைய, மனு தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு பிரதிவாதி தரப்பிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த மனுவில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட பாராளுமன்ற ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

## அடிப்படை மனித...

மீறி, தரமற்ற மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்ததன் மூலம், அடிப்படை மனித உரிமைகளை கெஹெலிய ரம்புக்வெல உள்ளிட்டோர் மீறியுள்ளதாக, நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதியரசர் பீ.பத்மன் சூரசேன தலைமையிலான மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம், நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் அமைப்பு மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின்படி, குற்றம் சுமத்தப்பட்டவர்கள், தனிப்பட்ட அபராதத் தொகைகளை அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டும்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல 75 மில்லியன் ரூபாவும்,

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த 50 மில்லியன் ரூபாவும்,

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முன்னாள் தலைவர் 50 மில்லியன் ரூபாவும் செலுத்தவேண்டும்.

அத்துடன், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித குணசேகர 50 மில்லியன் ரூபாவும்,

மருந்து விநியோகப் பிரிவு முன்னாள் பிரதி பணிப்பாளர் துஷித சுதர்ஷன 50 மில்லியன் ரூபாவும் செலுத்தவேண்டும்.

பதிவு செய்யப்படாத நிறுவனத்திடம் இருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு, அமைச்சரவையின் அனுமதியை தவறாகப் பயன்படுத்தியமை மற்றும் முறையான கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றத் தவறியமை ஆகியன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

தரமற்ற "இம்யுனோகுளோபுலின்" தடுப்பூசி கொள்வனவு ஊழல் காரணமாக, ஏற்கனவே, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மாணவனுக்கு...

வியாழக்கிழமை திடீர் சுகவீனம் காரணமாக மயங்கி விழுந்த நிலையில், சிகிச்சைக்காக இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அங்கு வைத்தியர்கள் கடமையில் இல்லை எனக் கூறி, மாணவனை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாதியர்கள் முதலுதவி அளித்தாவது தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வையுங்கள் எனக் கோரியபோதிலும், தாம் சிகிச்சை அளித்தால் தாமே பொறுப்பேற்கவேண்டும் எனவும் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இல்லாததால் தனியார் வாகனத்தில் அழைத்துச் சென்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் வைத்திய சாலை ஊழியர்கள் கூறியுள்ளனர்.

இதனை அடுத்து மாணவன் ஒட்டோவில் சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் வெளியான செய்திகளின் அடிப்படையில் , விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயம், இளவாலை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியிடம் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சம்பவம் தொடர்பில் விளக்கம் தருமாறு கோரியுள்ளது. (அ)

## வல்வெட்டித்துறை....

அனுமதிகளை பெறும் நடவடிக்கைகளை கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வரலாற்று மையத்தில் தடை செய்யப்பட்ட அமைப்பின் உருவங்கள், ஓவியங்கள், பதாகைகள், வரலாற்று சின்னங்கள், புலிகளின் தலைவரின் சிலை உள்ளிட்டவற்றைக் காட்சிப்படுத்த உள்ளனர் எனவும், அதனூடாக விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்யும் முயற்சி நடைபெறவுள்ளது எனவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அத்துடன் இத் திட்டத்தை இலங்கையில் ஆனந்த ராஜ் என்பவர் நடைமுறைப்படுத்தி வருவதாகவும், அதற்காக அவருக்கு முதல் கட்டமாக 16 இலட்ச ரூபாய் நிதி வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது. குறித்த பணப் பரிமாற்றம் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுப்பதற்காகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் மன்றில் அனுமதி கோரிய நிலையில், அதற்கான அனுமதியினை மன்று வழங்கியுள்ளது. (அ)

## பணி புரிந்த...

களவாடப்பட்ட நகைகளையும் அப்பெண்ணிடம் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்.நகர் பகுதியில் உள்ள வீடொன்றில் கணவன் - மனைவி இருவரும் வேலைக்கு செல்வதனால், வீட்டு வேலைக்கு என 54 வயதுடைய பெண்ணொருவரை பணிக்கு அமர்த்தியுள்ளனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வீட்டில் இருந்த 14 பவுண் நகை காணாமல் போயுள்ளது. அதனை அடுத்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தம்பதியினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த வீட்டின் பணிப்பெண்ணை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குறித்த வீட்டில் இருந்து களவாடப்பட்ட 14 பவுண் நகைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதேவேளை, குறித்த பெண் முன்னர் தான் பணியாற்றிய வீட்டிலும் நகைகளை களவாடியதை விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

குறித்த பணிப்பெண்ணை பொலிஸார் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## கனகராயன்குளம், புளியங்குளத்தில் வனவளத் திணைக்களம் அத்துமீறல்!

### மக்களின் முறைப்பாடுகளை பெற்றுக்கொண்டார் சத்தியலிங்கம்

வவுனியா, மார்ச் 28

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கனகராயன்குளம், புளியங்குளம் ஆகிய பகுதியில் வனவள திணைக்களத்தினால் அடாத்தாக கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் தொடர்பிலான பொதுமக்களின் முறைப்பாடுகளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பொதுமக்களுடன் நேரில் கலந்துரையாடி பெற்றிருந்தார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த மக்களுடன் ஏ-9 வீதி, பரசங்குளம், புளியங்குளத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா வடக்கு மக்கள் தொடர்பகத்தில் குறைகேள் கலந்துரையாடலில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர், கனகராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் வனவள திணைக்களத்தினரால் அடாத்தாக கையகப்படுத்தப்பட்டு எல்லைக்கற்கள் இடப்பட்டுள்ள மக்களுக்கு சொந்தமான காணிகள் தொடர்பிலான முறைப்பாடுகளையும், அதற்குரிய ஆவணங்களையும் பெற்றுக்கொண்டார்.

இவ்விடயத்தை அரசாங்க அதிபர், வனவள திணைக்களம், பிரதேச செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்வதாகவும் சத்தியலிங்கம் எம்.பி. தெரிவித்தார். (அ)

## ஜே.வி.பி. அலுவலக நிகழ்ச்சி நிரலில் செயற்படுகிறார் பொலிஸ்மா அதிபர்

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 28

மக்கள் விடுதலை முன்னணியின் பெலவத்தை காரியாலயத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக பொலிஸ் மா அதிபர் செயற்படுகிறார். பொலிஸார் அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி சாட்சியாளர்களை அச்சுறுத்தி வாக்குமூலம் பெறுகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையை குறிப்பிட்டுக் கொண்டு மக்கள் மீது ஒட்டுமொத்த சுமையையும் திணிக்க அரசாங்கம் முயற்சிக்க கூடாது. நெருக்கடி நிலைமையை கையாளும் திறன் அரசாங்கத்துக்கு இருக்கவேண்டும்.

கொவிட் பெருந்தொற்று காலத்தில் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளான போது மக்கள் விடுதலை முன்னணி அந்த நெருக்கடியை தனது அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்தியது. தமது ஆதரவாளர்களை வீதிக்கிறக்கி போராட்டங்களை தோற்றுவித்தது.

நெருக்கடியான நிலைமையில் அரசாங்கங்களை பலவீனப்படுத்தும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களில் செயற்பட்டதை போன்று நாங்கள் செயற்படபோவதில்லை. மக்களை வீதிக்கு இறக்கவுமில்லை. எதிர்க்கட்சிகளை விமர்சித்துக் கொண்டிருக்காமல் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

எரிபொருள் தட்டுப்பாடு வரும் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிட்ட போது அரசாங்கம் அதை பொருட்படுத்தவில்லை. தரமற்ற நிலக்கரி கொள்வனவினால் மின்னுற்பத்தி தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் மக்கள் விடுதலை முன்னணியின் பெலவத்தை காரியாலயத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக செயற்படுகிறார். பொலிஸார் அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள். அச்சுறுத்தி வாக்குமூலம் பெறுகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் ஒருபோதும் வெற்றி பெறாது - என்றார். (அ)

## இத்தாலியில் இலங்கை வம்சாவளி பொலிஸ் அதிகாரி சடலமாக மீட்பு!



மிலன், மார்ச் 28

இத்தாலிய பொலிஸ் துறையில் பணியாற்றிய ஒரே இலங்கை வம்சாவளி அதிகாரியான 27 வயதுடைய ஷெஹான் பெர்னாண்டோ, மிலனில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வென்னப்புவ, தல்டேனாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஷெஹான், மிலனில் உள்ள தனது தங்குமிடத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டதாக இத்தாலிய பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவரது உடலுக்கு அருகிலேயே அவரது பணித் துப்பாக்கியும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் ஒரு தற்கொலையா அல்லது திட்டமிட்ட கொலையா என்பது குறித்து இத்தாலிய பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதுவரை மரணத்திற்கான தெளிவான காரணங்கள் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலிய பொலிஸ்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே இலங்கையர் என்ற பெருமையைக் கொண்ட ஷெஹான், சக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த நன்மதிப்பைப் பெற்ற ஒரு அதிகாரியாகத் திகழ்ந்தார். இத்தாலியில் வசித்து வரும் அவரது பெற்றோரும் இந்தத் திடீர் இழப்பால் ஆழ்ந்த துயரத்தில் உள்ளனர்.

இந்தச் சம்பவம் இத்தாலியில் வாழும் இலங்கை சமூகத்தினர் மத்தியிலும், அந்நாட்டு பொலிஸ் துறையிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## குமார ஜயக்கொடிக்கு பிணை!

கொழும்பு, மார்ச் 28

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, அவரைப் பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு லங்கா உர நிறுவனத்தின் கொள்முதல் மேலாளராகப் பணியாற்றிய காலத்தில், அரசாங்கத்துக்கு 8.8 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினார் எனக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கிற்காகவே அவர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதியான அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் வாசித்துக் காட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படக்கூடும்

### மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 28

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் மோதல்களினால் ஏற்பட்டுள்ள வெளியக அழுத்தங்களின் விளைவாக இம்முறை சர்வதேச நாணய நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் மீளாய்வின்போது இலங்கையினால் முன்னெடுக்கப்படவேண்டிய மறுசீரமைப்புக்கள் தொடர்பில் விதிக்கப்படும் நிபந்தனைகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் காணப்படக்கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எதிர்வுகூறியுள்ளார்.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் தொடர்பான 5 ஆம் மற்றும் 6ஆம் கட்ட மீளாய்வுகளை முன்னெடுப்பதற்காகவும், மத்திய கிழக்கு மோதல்களினால் இலங்கையின் பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் தாக்கங்கள் குறித்து ஆராய்வதற்காகவும் நேற்று நாட்டுக்கு வந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழுவினர், பரந்துபட்ட சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளனர்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, மத்திய கிழக்கில் தீவிர மடைந்துவரும் மோதல்களினால் ஏற்பட்டுள்ள வெளியக அழுத்தங்களின் விளைவாக இம்முறை சர்வதேச நாணய நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் மீளாய்வின்போது இலங்கையினால் முன்னெடுக்கப்படவேண்டிய மறுசீரமைப்புக்கள் தொடர்பில் விதிக்கப்படும் நிபந்த னைகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் காணப்படக்கூடும் எனத் தெரிவித்தார். (அ)

## சித்திரைப் புத்தாண்டுக்கு முன் உயர்தர பரீட்சை பெறுபெறுகள்

கொழும்பு, மார்ச் 28

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு முடிவுகளை, சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதி கட்டத் தயாரிப்புப் பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பமான உயர்தரப் பரீட்சைகள், இடையில் ஏற்பட்ட "டித்வா" புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

இதனால் ஒத்திவைக்கப்பட்ட சில பாடங்களுக்கான பரீட்சைகள், கடந்த ஜனவரி 12 முதல் 20 வரை மீள நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் இன்று முதல் மட்டுப்படுத்திய சேவை

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள ஐக்கிய இலங்கை எரிபொருள் தாங்கி ஊர்திகளின் (பவுஸர்) உரிமையாளர்கள் சங்கம் இன்று முதல் தனது சேவைகளை மட்டுப்படுத்த தீர்மானித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் சுசாந்த ஜயவர்தன விடுத்துள்ள அறிவிப்பின்படி, இந்தத் தீர்மானத்திற்கு சில காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2025 செப்ரெம்பர் முதல் நடைமுறையில் இருந்த எரிபொருள் விலைச் சூத்திரத்தை தற்போதைய நிர்வாகம் சிதைத்துள்ளதாக சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

தங்களது கோரிக்கைகள் மற்றும் கவலைகள் குறித்து அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும், அதற்கு உரிய பதில் கிடைக்காததால் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முழுமையான பணிப்புறக்கணிப்பாக இல்லாவிட்டாலும், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்களே மட்டுமே எரிபொருள் கொண்டு செல்லும் பணியில் ஈடுபடும். மீதமுள்ள வாகனங்கள் சேவையிலிருந்து விலக்கிக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 28.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.